www.tamilarangam.net

விலை ரூபா 10.00

மக்கள் கட்சி தமிழீழம் — சுதந்திரம் — சமத்துவம்

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

வைகாசி 2000 | இதழ் -14

'நாங்க சிந்தின கண்ணீரும் ரத்தமும் வீணா போகேலை. எங்கட தமிழீழ அரச நாங்க கெதியிலை உருவாக்கிடுவம்.'

# தேசம் மீட்கப்படுகிறது!

ஆனையிறவில் வெற்றிக்கொடி நாட்டிய தமிழீழ விடுதலைப் புலிகள் வட தமிழீழம் நோக்கி வெற்றிகரமாக நகரத் தொடங்கியுள்ளனர். ஆனயைிறவு வெற்றியைக் கொண்டாடும் சுவரொட்டிகள் யாழ்பிராந்தியத்திலும் யாழ் பல்கலைக் கழகத்திலும் ஒட்டப்பட்டுள்ளன. ஐந்து வருட காலமாக சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பின் கீழ் பெருந்துன்பங்களை அனுபவித்துவரும் யாழ் மக்கள் அந்நியப் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கு தயாராகி விட்டனர்.

இதற்கு முன்னறிகுறியாக பளை மக்களை சிறிலங்கா இராணுவம் மனிதக் கேடயமாக தடுத்து வைத்திருந்த போது யாழ் மக்களின் மத்தியிலிருந்து வெளிப்பட்ட போராட்டங்களும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பரவாலான போராட்டங்களும் சான்றாகும். யாழ் மக்களின் இந்த எழுச்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்நோக்கிய தொடர்ச்சியான வெற்றிகளும் பரஸ்பரம் ஒன்றையொன்று பலப்படுத்தும் என்பது நிச்சயம். தாங்கொணாத கொடுமைகளை அன்றாடம் எதிர்கொள்ளும் மக்கள் கிளர்ந்தெழுவது சுதந்திர த்தின் பாலான மக்களின் வேட்கையை வெளிப் படுத்துவதாயுள்ளது.

யாழ் மக்கள் மாத்திரமல்லாது ஒட்டுமொத்த தமிழ் தேசமும் ஆனையிறவு வெற்றியைக் கொண்டாடுவதுடன் யாழ்மாவட்டம் எதிரிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப் படுவதை ஆவலுடன் எதிர்ப்பார்த்திருக்கின்றனர். அவ்வகையில் இவ்வெற்றியை தேசத்தின் வெற்றியாக நமது மக்கள் கருதவும் அதனுடன் தம்மை இனங்காணவும் செய்வதானது மக்களது உணர்வுகள் விடுதலையுடனும் போராட்டத்துடனும் எவ்வளவு ஆழமாக பிணைந்துள்ளன என்பதையேக் காட்டுகிறது. அத்துடன் கொழும்பைச் சார்ந்துள்ள தமிழ்க் குழுக்களின் அணிகள் கூட தேசத்தின் வெற்றியை கொண்டாடுமளவுக்கு நம் தேசம் மென் மேலும் ஒருங்கிணைந்து வருகிறது.

இந்நிலையில் பலவீனப்பட்டுப் போயிருக்கும் சிறிலங்கா அரசின் அதிகாரத்தை நம்மண்ணிலிருந்து முற்றாக துடைத் தெறிவதற்கு தேசவிடுதலையில் நாட்டமுள்ள அனைத்து சக்திகளும் <u>தேசவிடுதலை பதாகையின் கீழ்</u> ஓரணி திரள்வதும் நமது விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளை பலப்படுத்துவதும் நம்மனைவரினதும் இன்றைய வரலாற்றுக் கடமையாயுள்ளது.

## தமிழகம்: நமக்காக !!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர் வெற்றிகளும் உருவாகியிருக்கும் இராணுவ சம நிலை மாற்றங்களுடன் கூடிய அரசியல் திருப்பமும் ஈழத் தமிழர்கள் தமிழீழ தனியரசை கூடிய விரைவில் அமைக்கப் போவதை உலகிற்கு அறிவித்து வருகின்றன. இந்நிலையில் தோற்றுப் போய்க் கொண்டிருக்கும் தமது படைகளை பாதுகாக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் சந்திரிகா அரசு வெளிப்படையாகவே இந்திய அரசின் உதவியை எதிர்பாத்தது.

ஈழத்தமிழரின் நலனில் என்றும் அக்கறை கொண்டுள்ள தமிழக மக்களும் தமிழக அரசியல் தலைவர்களும் கொண்டுள்ள உறுதியான நிலைப்பாட்டின் காரணமாக, இந்திய இராணுவம் இலங்கைக்கு எவ்வகையிலும் செல்லாது எனும் நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்கும் நிலை இந்திய மைய அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அத்துடன் யாழ்மாவட்டத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் சிங்களப் படைகளை மீட்கும் பணியிலும் இந்திய படைகள் செல்லாது என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங் அறிவிக்கும் அளவிற்கு தமிழக மக்களதும் தலைவர்களதும் அழுத்தம் காரணமாக இருக்கிறது. தாம் சிறைப்படுத்தப்படும் ஆபத்துக்களை எதிர்கொண்டும் கூட நமது தேசவிடுதலைப் போராட்டத்திற்காக இவர்கள் பகிரங்கமாக செயற்பட்டு வருகின்றனர் என்பது எமக்கு மேலும் நம்பிக்கை ஊட்டுவதாக உள்ளது.

நமது மக்களின் விடுதலைக்காக என்றென்றும் தோள்கொடுத்து வரும் தமிழக மக்களும் தமிழ் தலைவர்களும் தொடர்ந்தும் எமது தேசத்திற்கும் விடுதலைப்போராட்டத்திற்கும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்கு எதிராக எமது சார்பில் குரல் கொடுப்பார்கள் எனும் நம்பிக்கை எமக்குண்டு. அவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் நமது தேசம் தன் வரலாற்றில் குறித்துக் கொள்ளும். வாழ்க உலகத் தமிழர் ஒற்றுமை!!!

## எது மனிதாபிமானம். . . ???

1995இல் சந்திரிகாவின் படைகள், குடிமனைகளையும் தோட்டங்களையும் தமது இரும்பு டாங்கிளால் துவம்சம் செய்த படி, செல்மழை பொழிந்து மக்களை கொன்றொழித்தபடி யாழ் நகரை நோக்கி மும்முனை ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் நமது தேச வரலாற்றில் என்றுமேயில்லாவாறு நான்கு லட்சம் மக்களும் தமது உயிரைப் பாதுகாக்க எங்கு செல்வதென்று தெரியாது தம் இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.நமது மக்களால் என்றுமே மறக்க முடியாத அந்த துயரமானதும் கொடுமை மிக்கதுமான நாட்களின் போது எம்மீது மனிதாபிமானம் காட்ட யார் வந்தார்கள்? பட்டினியால் நமது குழந்தைகள் மரணிக்கையில், நோய்க்கு மருந்தின்றி வாழ வேண்டிய வயதில் பெண்களும் ஆண்களும் அநியாயமாக இறக்கையில், நடக்க முடியாத முதியவர்கள் செல்விழுந்து மரத்தடிகளில் மரணித்துக் கிடக்கையில் எம்மீது கருணை காட்டியவர்கள் யார்? இன்று, தனது கண்ணீரையும், இரத்தத்தையும் பிழிந்து சொந்தப்பலத்தில் நமது தேசம் வெற்றிகளை ஈட்டிவருகையில், எந்தப் படைகள் எம்மைக் கொன்றொழிக்கின்றனவோ, எந்தப்படைகள் எமது விடுதலையை நசுக்கிட தயாராயுள்ளனவோ . . . அந்த சிறிலங்காப் படைகளுக்கு மனிதாபிமானம் காட்ட வேண்டும் என ஆதிக்க சக்திகள் அங்கலாய்கின்றனர். இக்குறிப்பான கட்டத்தில் அவமானகரமாக தோற்கடிக்கப்பட்டு வரும் சிறிலங்காப் படைகளை பாதுகாக்க மனிதாபிமான உதவி பற்றி கதைப்பதன் அர்த்தம் என்ன? எமது தேசம் விடுதலையின் நுழைவாயிலில் காலடி வைத்திருக்கும் இத்தருணத்தில் சந்திரிகா அரசுக்கு உதவ எத்தனிக்கும் சக்திகள் தொடர்பாக நாம் விழிப்பாயிருப்போம் !!!

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

www.tamilarangam.net

# திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்

அரைநூற்றாண்டுக்கு முன்னர், அரசதிகாரத்தை பிரித்தானியரிடம் இருந்து தம்வசப்படுத்திக்கொண்ட சிங்கள தலைமையானது அதன் பின் வந்த தசாப்தங்களில் நமது மக்கள்மீது நன்கு திட்டமிட்ட அடிப்படையில் பல்வேறு அடக்குமுறைகளை பிரயோகித்து வந்தது. அதில் மிகவும் பிரதானமானதும், முனைப்பானதும், சிறிலங்கா அரசயந்திரம் முழுவதும் ஒரே இலக்குடன் ஒடுக்குமுறையை மேற்கொண்டதுமான தளமாக இன்று வரை தொடர்ந்து வருவது திட்டமிட்ட சிங்கள குடியேற்றமாகும். வெவ்வேறு மூன்று வழிமுறைகளையும் இலக்குகளையும் கொண்டதாக இது நடைமுறைப்படுத்தப்பட்டது.

குடிப்பரம்பலை, சனத்தொகை வீதத்தை மாற்றியமைத்து ஈழத் தமிழரிடம் இருந்தும் முஸ்லீம்கள் மற்றும் மலையக தமிழரிடம் இருந்தும் அரசியல் அதிகாரங்களை பறித்தெடுப்பது. பலமான சிங்கள அரசுயந்திரத்தைக் கட்டமைப்பது.

நிலம்,கடல் மற்றும் சந்தை வளங்கள் வாய்ப்புகளை பிடுங்கிக்கொள்வது. நமது தாயகத்தை துண்டாடுவது.

பௌதிக இருப்பை உயிர் உடமைகளை அழித்தொழிப்பது. இதன் மூலமாக நமது பாரம்பரிய வதிவிடங்கள், தொழில் தளங்களில் இருந்து நம்மை விரட்டியடிப்பது.

இவற்றை இணைத்துப் பார்ப்போம் எனின், சிறிலங்கா அரசின் இலக்கு என்பது, ஒட்டுமொத்தத்தில் நமது தேசிய இருப்பை துடைத்தெறிவதும். இனஅழிப்பை படிப்படியாக மேற்கொள்வதும் என்பது தெளிவாகும்.

தேசிய விடுதலைப் போராட்டத் தலைமையானது ஒரு சிலரிடம் இருந்து பரந்துபட்ட மக்களுடையதாகவும் அவர்களது போராட்டமாகவும் முனைப்படைவதற்கு மிகவும் அடிப்படையாக இருந்தது திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களும் அதன் பாரதூரமான பக்கவிளைவுகளும் ஆபத்துமாகும்.

இந்த திட்டமிட்ட குடியேற்றங்கள் பல்வகைப்பட்டது. விவசாய குடியேற்றங்கள், மீனவக்குடியேற்றங்கள். தொழில்துறை குடியேற்றங்கள், புனிதநகர குடியேற்றங்கள், இராணுவகுடியேறறங்கள், தற்போது சமாதான நகரம் என்ற போர்வையில் இப்படி பல...

நமது தேசிய இருப்பை இன்றும் என்றும் கேள்விக்குள்ளாக்கிய அம்சம் என்ற விதத்தில் இதில் எமக்கு விட்டுக்கொடுக்காத ஒரு கொள்கை இருக்க வேண்டும். அது நமது பரந்துபட்ட மக்களின் நலன்களை காப்பதாகவும் அதேசமயம் சக சமூகங்களின் நியாயமான உரிமைகளை பேணுவதாகவும் இருக்க வேண்டும்.

நமது தேசியவிடுதலைப்போராட்டமானது, சிறிலங்கா அரசினதும் சிங்கள படைகளினதும் மிகவும் கொடுரமான அடக்குமுறைகளையும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களினால் ஏற்பட்ட கொடிய விளைவுகளையும் எதிர்த்து கருக்கொண்டு வளர்ச்சி கண்டது. இதனால் கடந்த காலங்களில் இந்த திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்கு எதிராக விடுதலைப்போராட்ட அமைப்புகளின் வழிமுறைகள் கணிசமான தவறுகளுடன் கூடியதாக இருந்ததை நாம் இப்பொழுது புரிந்து கொள்கின்றோம். குறிப்பாக, சிறிலங்கா அரசு மற்றும் சிங்கள ஆளுங் குழுமத் தின் நலன்களுக்கும் சிங்கள குடியேற்றவாசிகளின் பல்வேறுபட்ட நலன்சார்ந்த வெளிப்பாடுகளுக்கும் இடையே அடிப்படையில் வேறுபாடுகளும் சில ஒத்த தன்மைகளும் உள்ளன. இவ்வாறு குடியேற்றப்பட்டுள்ளவர்கள் நம்மீதான ஆக்கிரமிப்புக்கு துணைபோகின்றவர்களாக இருக்கின்ற அதேநேரத்தில், சிங்கள அதிகார பிரவினரின் பகடைக் காய்களாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றார்கள். இத்தகைய வேறுபாடுகள் குறித்து நமது போராட்ட தலைமைகள் அன்று கணிசமான தெளிவின்மையை கொண்டிருந்தன.

இத்தகைய திட்டமிட்ட குடியேற்றங்களை முறியடிக்க, குடியேற்றப்பட்டுள்ள சிங்கள மக்கள் மீது, நேரடியான வன்முறை தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடுகளை ஒரு பிரிவினர் கொண்டிருந்தனர். அதேநேரத்தில், அக்குடியேற்றங்களுக்கு பாதுகாப்பாக இருந்துகொண்டும், பாதுகாப்பாக இருப்பதாக காட்டிக்கொண்டும் எம்மீது ஆக்கிரமைப்பை மேற்கொண்டு வந்த சிறிலங்கா படையை முறியடிப்பதன் மூலமாக குடியேற்றவாசிகளை தாமாகவே வெளியேறச்செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டடை இன்னொரு பிரிவினர் கொண்டிருந்தனர். பாரிய இடைவெளி கொண்ட வேறுபட்ட இவ்விரு வழிமுறைகளின் நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளை நாம் தற்போது அனுபவத்தில் உணர்ந்து கொண்டுள்ளோம். இது பற்றி எமது பத்திரிகையில் (இதழ்) கட்டுரையொன்றில் எழுதியிருந்தோம்.

இதில் கற்றுக்கொண்ட பிரதான பாடம், இந்த அம்சத்தை நாம் வெற்றிகரமான தேசியநலன்பாற்பட்டு கடப்பதற்கு எதிர்மறை வழிமுறைகளுக்கு பதிலாக நேர்மறை வழிமுறைகளை பயன்படுத்து என்பதாகும். அண்மைக் காலங்களில், சிங்கள மக்களை நேரடி இலக்காக கொள்ளாத வகையில், சிங்கள படைகள் மீது மட்டும் விடுதலை புலிகள் மேற்கொண்டு வந்திருக்கின்ற தாக்குதல்கள் சர்வதேச ரீதியில் மட்டுமன்றி, சிங்கள மக்கள் மத்தியிலும் நமது விடுதலை போராட்டம் தொடர்பாக ஒரு காத்திரமான அபிப்பிராயம் தோன்றுவதற்கு காணமாகியுள்ளன. இது எமது போராட்ட இலக்கையும் அதன் தார்ப்பரியம் மற்றும் விழுமியங்களையும் உயர்த்துவதாக இருந்தது.

எல்லைப்புற இராணுவ முகாம்களையும், திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள இராணுவமுகாம்களையும் தாக்கியழித்தல்: மணலாறு, சேருவில போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை பிரதான இலக்காக கொள்ளுதல், பாரம்பரியமாக குடியிருப்பவர்களின் சிங்கள குடியிருப்புகளையும் ஆக்கிரமிப்பு வகைப்பட்ட குடியிருப்புகளையும் வேறுபடுத்திக்கொள்தல் என்பவை முக்கியமானவையாகும்.

அத்துடன் கணிசமான சந்தர்ப்பங்களில் சிறிலங்கா அரசினதும் அதன் படை மற்றும் நிர்வாக அதிகாரத்துவத்தினதும் நேரடியான அடக்குமுறைகள் இல்லாவிட்டால் இயல்பான மனிதவளங்களின் பயன்பாடு என்ற வகையில் சிங்கள் மக்களின் சாதாரண குடியிருப்புகள் இருப்பதால் நமக்கு ஏற்படும் பரஸ்பர பயன்பாட்டை வேறுபடுத்திப்பார்த்து அவற்றுடன் எதிர்காலத்தில் சாதமாக உறவுகளை தாபித்தல்: திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தின் பாதிப்புகளை தமிழ், முஸ்லீம் மக்களின் பொதுப்பிரச்சனை யாக்குதல். ஈற்றில் நமக்கு வாயப்பான சூழல் அமையும் போதெல்லாம் (தொடர் 5ம்பக்கம்)

# அன்னை பூபதி நினைவாக ...

நமது மண்ணை ஆக்கிரமித்து அட்டுழியங்கள் புரிந்துகொண்டிருந்த இந்தியப்படைக் கெதிராக அகிம்சை வழிப் போராட்டத்தினூடாக தனது எதிர்ப்பை தெரிவித்த அன்னை பூபதி அவர்கள் தன்னுயிரை அர்ப்பணித்து சித்திரை 19ம் திகதியுடன் 12 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

தென்தமிழீழத்தில் மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் மக்களது மனித உரிமை மீறல்களுக்கெதிராக போராடிவந்த அன்னையர் முன்னணி அமைப்பின் உறுப்பினரான அன்னை பூபதி அவர்கள், இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் மேற்கொண்டு வந்த அட்டுழியங்களை சகித்துக் கொள்ள முடியாத நிலையில், இந்தியப்படைக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே உடனடியாக நிபந்தனையற்ற யுத்தநிறுத்தம் மற்றும் இந்திய அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டார்.

நமது மண்ணுடன் எவ்விதத்திலும் தொடர்பற்ற அந்நியப் படைகள் நமது மண்ணை அத்துமீறி ஆக்கிரமித்திருந்ததுடன் மண்ணின் மக்கள் மீது மேற்கொண்டுவந்த அநியாயங்களையும் பூபதி அவர்களின் அகிம்சைப்போராட்டம் மிக நிதர்சனமாக உலகுக்கு அம்பலப்படுத்தியது.

மனித நேயத்திற்கு எல்லைகள் கிடையாது. தமிழ், முஸ்லிம் மக்களின் ஒருமித்த துயரை தனதாக இனங்கண்டதன் விளைவு தன்னுயிரை அர்ப்பணிக்குமளவுக்கு அன்னை பூபதி அவர்களை இட்டுச் சென்றது. மக்களை வேறுபிரித்துப் பார்க்காத தனது மனித நேய உணர்வை நமது போராட்ட அரசியல் பற்றிக் கொள்ள வேண்டும் என்பதை தனது மரணத்திற் கூடாக நம் தேசத்துக்கு ஆழ உணர்த்திச் சென்றிருக்கிறார்.

இந்திய ஆக்கிரமிப்புப்படைகள் நம்மண்ணைவிட்டு வெளியேற்றப்பட்டு இவ்வருடத்துடன் பத்துவருடங்கள் பூர்த்தியாகும் நிலையில், அப்படைகளின் அக்கிரமங்களுக்கு எதிராக தன்னுயிரை மனித நேயத்தின் பெயராலும் தேசத்தின் பெயராலும் அர்ப்பணித்த அன்னை பூபதி அவர்களை பெருமதிப்புடன் நினைவு கூர்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உழைப்பாளர் தின பிரகடனம்

உழைப்பு என்பது மனித சமூகத்தின் சாரமாகும். மனிதரை ஒரு சமூகமாக பிணைத்து வைத்திருப்பதில் மரத்தை மண்ணோடு பிணைத்திடும் வேருக்கொத்த பாத்திரத்தை உழைப்பு ஆற்றி வருகிறது. உழைப்புடன் இணைந்ததன் மூலமே மனித இனத்தால் தன்னை உணரும் நிலையை அடைய முடிந்தது என்பதும் உழைப்பின் பெருமதிமிக்க அம்சங்களில் ஒன்றாகும்.

ஈழமக்களான நாமும் ஏனைய மக்கள் சமூகங்களைப் போன்றே கூட்டாக உழைப்பில் ஈடுபடுவதன் மூலம் வரலாற்றில் முன்னோக்கிய நகர்வைக் கொண்டுள்ளோம். நமது பிரதேசத்தில் நமக்கான வளமான பொருளாதாரத்திற்கு அடித்தளமிட்டுள்ளோம். நமது உழைப்பு நம்மைப் பண்படுத்தியிருக்கும் அளவுக்கு மனிதர்களெனும் வகையில் நாமும் நமக்கான சிந்தனை மற்றும் வாழ்வியல் முறைகளை செப்பனிட்டு வந்துள்ளோம். அதன் மூலம் பன்முகப்பட்ட கலாச்சார, பண்பாட்டு வளர்ச்சிமிக்க சமூகமாக நமது சமூகத்தை ஏனைய சமூகங்களுக்கு சமத்துவமாக நிறுவியுள்ளோம்.

வன்னியிலும் கிழக்கிலும் யாழ் குடாவிலும் நமது மக்கள் தம்மை ஒரு குறிப்பிட்ட பிரதேசம் சார்ந்தவர்களாக இனம் காண்பது வெறுமனே நிலப்பரப்பு சார் அடையாளமாக மாத்திரமல்ல. அந்த நிலப்பரப்புகளில் மக்களால் மேற்கொள்ளப்பட்ட தனித்துவமான உற்பத்திமுறைகளினாலும் தான். ஒரு தேசத்தின் வளர்ச்சியில், ஆளுமையைக் கட்டமைப்பதில் உற்பத்தி நடவடிக்கைக்கும் அதன் சாரமான உழைப்புக்கும் குறிப்பான பாத்திரமுண்டு. இவ்வாறு பாரம்பரியமான பன்முகப்பட்ட உற்பத்தி முறைகளுடன் கூடிய உழைப்பும் நம்மை ஒரு தேசமாக வளர்த்தெடுப்பதில் குறிப்பிட்ட பாத்திரம் ஆற்றி வந்திருப்பது நமது தேசத்தின் வரலாற்று ரீதியான சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பினால் நமது தேசத்தின் அனைத்து விதமான உழைப்பு மூலங்களும் அழிக்கப்பட்டும் சிதறடிக்கப்பட்டுமிருக்கும் நிலையில் நம் தேசத்தின் பெருமளவு மக்கள் உழைப்பிலீடுபட முடியாது, உழைப்பதற்கான உரிமை மறுக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். பொருளாதார தளத்திலும் அறிவியல் சிந்தனை தளத்திலும் நமது சமூகத்தை முன்னோக்கி கொண்டு செல்லும் இயக்கம்



பாதிக்கப்பட்டுள்ளது. இது ஒரு தேசம் எனும் வகையில் நமது பௌதீக - ஆன்மீக முன்னேற்றத்தின் மீது பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நமது மக்களின் உழைப்பிற்கு பாதிப்பு வந்த பொழுதெல்லாம், நாம் உழைப்பாளர் எனும் வகையில் அடக்கப்படுவதை உணர்ந்த பொழுதெல்லாம் அதற்கெதிராக கிளர்ந்துள்ளோம். இது இரு தளங்களில் நடைபெற்று வருகிறது. அடக்கப்பட்ட தேசத்து உழைப்பாளர் எனும் வகையில் தமது உரிமைகளுக்காக சிறிலங்கா அரசுக்கெதிராக போராடுவது: கடற்றொழிலாளர் போராட்டம், தமிழ் ஆசிரியர் சங்கத்தினரின் போராட்டம் போன்றன இதற்கு சிறந்த உதாரணமாகும்.

இதன் மறுபுறம், தேசத்தின் அக வாழ்வில் சுரண்டப்படும் மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவது: இது பெரியளவிலான போராட்டங்களாகவும் பிரதான பேசுபொருளாகவும் வெளிப்படாவிட்டாலும் கூட, சமூக அடித்தளத்தில் அதன் உறவுகளை மீள மீள கட்டமைத்திடும் சமூகத்தின் தீர்க்கமான போராட்டங்களாக இவை உள்ளன. விவசாய மற்றும் மீனவக் கிராமிய உழைப்பாளர்கள், வகுப்புத் தொழிலாளர்கள் (பொதி சுமப்பவர்கள்), கடைச் சிப்பந்திகள், கட்டிடத் தொழிலாளர்கள், சிறிய உற்பத்தித் தளங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள், சீவல் தொழிலாளர்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள்... என பல்வேறுபட்ட தொழில் பிரிவுகளையும் சார்ந்த உழைப்பாளி மக்கள் தம்மீதான உழைப்புச் சுரண்டல் சகித்துக் கொள்ள முடியாதளவுக்கு சுமையாக அழுத்துவதை இனங்காண்கையில் அதை எதிர்த்து போராடுகின்றனர். அதே போல் தம்மை சுரண்டும் பிரிவினர் உழைப்பில் ஈடுபடும் தம்மை அநாகரீகமாக நடாத்துவதற் கெதிராகவும் போராடி வருகின்றனர். இவ்வாறு நமது தேசத்தின் அகவாழ்வில் சுரண்டப்படும் மக்கள் நடாத்தும் போராட்டமானது தமது பொருளாதார உரிமைக்கான போராட்டமாகவும் சுயகௌரவத்திற்கான ஜனநாயகப் போராட்டமாகவும் பன்முக தளங்களில் அமைந்திருப்பதும் கவனிக்கத் தக்கது.

ஒரு தேசம் எனும் வகையில், நாம் அனைவரும் எந்த புற தடைகளுமின்றி உழைப்பிலீடுபடுவதற்கான உரிமையை நிலைநாட்டுவதற்கான போராட்டமும், அதே போல் நமது உழைப்பு சுரணடப்படுதல், உழைப்பு வடிவங்கள் இழிவுபடுத்தலுக்குள்ளாதல், உழைப்பாளர்கள் அவமானப்படுத்தப்படல், பாலின ரீதியான வேலைப் பிரிவினைகளும் கட்டுப்பாடுகளும் ஆகிய அடக்குமுறைகளுக்கு எதிராக ஒரு விரிவான பன்முக வடிவிலான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவையை எதிர்கொண்டுள்ளோம். இன்று நமது சமூகத்தில் உழைப்பிலீடுபடும் சுரண்டப்படும் பிரிவினரும், வறுமையில் அல்லலுறும் பெரும்பான்மை மக்களும் ஓரணியில் திரளக் கூடியவர்கள் ஆவர். இவர்களே செங்கொடியை நமது தேசத்தில் தாங்கிச் செல்லும் முன்னணிப்படையாவர். இப்பிரிவினரே நமது தேசத்தின் தாங்கு சக்தியாக திகழ்கின்றனர்.

வரலாறு காணாத வீரியத்துடன் வெளிப்பட்டிருக்கும் நமது தேச விடுதலைப் போராட்டத்தை தாங்கி நிற்பவர்கள் நமது தேசத்தின் உழைக்கும் மக்களே. இன்று பெண்களும் ஆண்களுமாக உயிரை அர்ப்பணித்து போராடிக் கொண்டிருக்கும் இளம் போராளிகள் உழைப்பாள மக்களின் பிள்ளைகளே. பிரெஞ்சுப் புரட்சிமுதல் இன்றுவரையிலான அனைத்துப் போராட்டங்களிலும் பெருமளவில் ஈடுபடுபவர்கள், வீரமுடன் போராடி மடிபவர்கள் உழைப்பாள பிரிவினர்தான். எனினும் போராட்டங்களின் வெற்றியுடன் அமையும் புதிய அரசுகளில் இப்பிரிவினருக்கு பங்கேதுமின்றிப் போகிறது. போராட்டத்தில் நேரடியாக ஈடுபடாத அதிகாரப் பிரிவினர்களின் நலன்களைப் பாதுகாப்பானவையாக அரசுகள் உருப்பெருகின்றன. அடக்கப்படும் மக்கள் பிரிவினராக தொடர்ந்தும் வாழ உழக்கும் மக்கள் தள்ளப்படுகின்றனர். அவர்கள் உருவாக்கிய அரசே அவர்களை அடக்கும் எதேச்சாதிகாரியாக மாறுகிறது. நமது விடுதலைப் போராட்டம் இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தமிழீழ அரசின் நலன்கள் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தாங்கு சக்தியாகத் திகழும் உழைப்பாள மக்கள், பெண்கள், அடக்கப்பட்ட விளிம்பு நிலைப் பிரிவினரின் நலன்களைப் பாதுகாக்கும் மக்கள் அரசாக அமைந்திட வேண்டும். சுரண்டப்படும் மக்களைப் பிணைத்திருக்கும் சங்கிலிகளைத் தகர்த்திடும் மக்கள் அரசு தமிழீழத்தில் மலரட்டும் !!!

சுபத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலை போராட்டத்தில் விடுதலை புலிகள் — 02

## ஜனநாயக முறைமையும் விடுதலை புலிகளும்:

அரசியல் தளத்தில் ஜனநாயகம் என்பது, முதன்மையாக பன்முக தன்மையை குறிக்கின்றது. மக்கள் தாமே சுயாதீனமாகவும் நேரடியாகவும் அரசியல் செயற்பாடுகளில் பங்கு கொள்வதையும் தமது நலன்களுடன் நெருக்கமாக உள்ள அரசியல் அமைப்புக்களை ஆதரிப்பதையும் வெவ்வேறு போராட்ட வடிவங்கள் பின்பற்றப்படுவதையும் சாத்தியமாக்குகின்ற ஒரு முறைமையாக ஜனநாயக அரசியல் முறைமை அமைகின்றது. உண்மையான மக்கள் இயக்கத்தின் அரசியல் ரீதியிலான வெற்றி என்பது, அந்த இயக்கத்தில் ஜனநாயக முறைமை எவ்வளவு ஆரோக்கியமாக பேணப்படுகின்றது என்பதிலேயே இறுதியில் தங்கியிருக்கின்றது.

ஜனநாயக முறைமை என்பதை "சட்டபூர்வ" அரசியலுடன் மட்டும் பொருத்தி பார்க்கின்ற தவறு, போராட்ட அரசியல் சூழலில் பொதுவாக இடம்பெற்று வருகின்றது. "சட்டபூர்வ" அரசியலில் மட்டுமல்ல, "சட்டவிரோத" அரசியலிலும் ஜனநாயக முறைமைகள் பின்பற்றப்பட வேண்டும். "சட்டவிரோத" மற்றும் "சட்டபூர்வ" அரசியல் என்பவை, ஆதிக்க அரசுகளின் கருத்தாக்கங்களாக அமைகின்றன. ஒவ்வொரு விடுதலை போராட்டமும் ஒரு நிலையில், ஆதிக்க அரசுகளினால் "சட்டவிரோத" அரசியலாக அறிவிக்கப்பட்டு விடுகின்றது. இத்தகைய அறிவிப்பு, அந்த போராட்டத்தில் ஜனநாயக முறைமைகள் பின்பற்றப்படுவதை சாத்தியமற்றதாக்கி விட்டது என்பதை குறிப்பதல்ல, மாறாக இத்தகைய அறிவிப்பு, அடக்குமுறையாளர்களுக்கும் அடக்குமுறைக்குட்பட்டுள்ள மக்களுக்கும் இடையே ஜனநாயகரீதியிலான உறவுகள் இனிமேல் சாத்தயமில்லை என்பதை குறிக்கின்றதே தவிர, அடக்குமுறைகளுக்கு எதிராக போராடுகின்றவர்களுக்கிடையே ஜனநாயகம் நிலவ முடியாது என்பதை குறிக்கவில்லை.

ஜனநாயக முறைமை என்பதை பன்முக அரசியல் வெளிப்பாடு என கொள்வோமாயின், ஒரு "சட்டவிரோத" அரசியல் சூழலில் ஜனநாயக முறைமை பேணப்படுவது என்பது, ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் அமைப்புக்கள் வெவ்வேறு வடிவங்களில் மக்களின் உரிமைக்காக போராடுவதைக் குறிக்கின்றது. இத்தகைய சூழலில் "ஜனநாயகமின்மை" என்பது, மக்களின் நலன் சார்ந்து, மக்களினால் மட்டுமே தீர்மானிக்கப்பட முடியும். தமது நலன்களுக்கு எதிராக செயற்படுகின்ற அரசியல் அமைப்புக்களின் "ஜனநாயக உரிமையை" நிராகரிக்கவும் அவற்றை தமது அரசியல் அரங்கிலிருந்து அகற்றவும் கூடிய உரிமையை மக்கள் மட்டுமே கொண்டிருக்கின்றார்கள்.

நமது அரசியல் இயக்கத்தில் இதுவரை செயற்பட்டு வந்திருக்கின்ற எந்தவொரு தலைமையும் ஜனநாயக மரபுகளை நேர்மையாக பின்பற்றியதில்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் உருவான அரசியல் தலைமைகள், தம்மை மக்களின் ஒரே தலைமையாக, தனித்தலைமையாக நிலைநாட்டவே முயற்சித்து வந்திருக்கின்றன. தமக்கு வெளியே, மக்களும் ஏனைய அரசியல் அமைப்புக்களும் சுயாதீனமாக அரசியலில் ஈடுபடுவதை இந்த தலைமைகள் வன்மையாக தடுத்து வந்துள்ளன. நமது மக்களின் ஏகப் பிரதிநிதியாக அமைந்து, அதன் மூலம் நமது நலன்களையும் தாம் பிரதிநிதித்துவப்படுத்திய ஆதிக்க சக்திகளின் நலன்களையும் பேணுவதாகவே இவற்றின் அரசியல் செயற்பாடுகள் அமைந்து வந்திருக்கின்றன.

நமது அரசியல் தலைமைகளில் குடிகொண்டிருந்த இத்தகைய ஆதிக்க மரபின் வன்முறைரீதியான தொடர்ச்சியாக, நீட்சியாக ஆயுதப் போராட்ட அமைப்புகள் உருவெடுத்தன. நமது அரசியல் இயக்கத்தில், ஜனநாயக மரபுகள் நிலவ கூடிய கடைசி வாய்ப்பையும் அழித்தே தீருவது என்று சபதம் எடுத்தவை போன்று இந்த ஆயுத அமைப்புக்கள் அனைத்தும் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டன. இந்த ஆயுத அமைப்புக்கள் உருவானது முதலே, ஒன்றையொன்று அழிக்கவும் தனித்தலைமையாக தம்மை நிலைநாட்டவும் கடும் பிரயத்தனப்பட்டு வந்திருக்கின்றன. அனைத்து அமைப்புக்களிலும் நிலவிய இத்தகைய ஆதிக்கப் போக்கானது, உட்கொலைகளாகவும் இயக்க மோதல்களாகவும் இயக்க அழிப்புகளாகவும் வெடித்து கிளம்பின. இறுதியில் நமது தேசத்தின் விடுதலைக்காக போராட முன்வந்த நூற்றுக்கணக்கான போராளிகளை அழித்ததன் மூலமும் சிங்கள படைகளுக்கு எதிரான தனது உறுதியானதும் தொடர்ச்சியானதுமான ஆயுதப் போராடட்டத்தின் மூலமும் விடுதலை புலிகள் அமைப்பு நமது தேசிய இயக்கத்தின் தனித் தலைமையாக தன்னை நிறுவி கொண்டுள்ளது.

இவ்வாறு, விடுதலை புலிகள் இயக்கம் தன்னை நமதுதேசத்தின் ஒரே அரசியல் தலைமையாக நிறுவிக் கொண்டுள்ளது என்பது, மறுபுறத்தே நமது போராட்டத்தில் ஜனநாயக முறைமைகள் வன்மமாக மறுக்கப்பட்டிருப்பதை குறிக்கின்றது. நமது மக்கள் தாமே நேரடியாக, சுயாதீனமாக அரசியல் பேராட்டங்களில் ஈடுபடுவதை விடுதலை புலிகள் தடுத்திருப்பதோடு, மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக வேறுபட்ட அரசியல் அமைப்புக்கள் செயற்படுவதற்கான சாத்தியத்தையும் முற்றாக தடைசெய்துள்ளனர். இவ்விதம் விடுதலை புலிகள் தடை செய்திருப்பது, சிறிலங்கா மற்றும் இந்திய அரசுகளுக்கு சார்பாக செயற்படுகின்ற அரசியல் அமைப்புக்களை மட்டுமல்ல, கூடவே, நமதுமக்களின் விடுதலைக்காக ஏற்கனவே தம்மை அர்ப்பணித்து செயற்பட்டு வந்த அரசியல் அமைப்புக்களையும், மக்கள் மத்தியிலிருந்து புதிதாக உருவாகக் கூடிய, நமது மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்காக தமக்குரிய வழிகளில் போராட கூடிய புதிய அரசியல் அமைப்புக்களையும் அது தடுத்துள்ளது.

ஒரு அரசியல் இயக்கத்தில் தனித்தலைமை என்பது, அதிகாரத்துவத்தின் தெளிவான குறியீடாக அமைகின்றது. பன்முக தன்மைகள் கொண்டிருக்கின்ற மக்கள் மத்தியிலிருந்து பன்முக அரசியல் தலைமை உருவாவதற்கு எதிரான கருத்தாக்கமாகவும் செயல்வடிவமாகவும் தனித்தலைமை என்பது அமைகின்றது. வரலாற்றில் இடம்பெற்றிருக்கின்ற அனைத்து அனுபவங்களும் தனித்தலைமை என்பது, மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் கொடிய முறையில் அகற்றியிருக்கின்ற துயர விளைவுகளை குறித்து நிற்கின்றன. விடுதலை புலிகளின் தனித்தலைமை என்பதும், இத்தகைய வரலாற்று அனுபவத்தை, நமது தேசிய அரசியலில் இரத்த துளிகொண்டு மறுபதிப்பு செய்வதாகவே அமைந்திருக்கின்றது.

விடுதலை புலிகள் தம்மை தனித்தலைமையாக நிறுவி கொண்டது என்பது, மக்களின் அரசியல் விருப்பதினாலோ, மக்களின் அரசியல் தெரிவினாலோ நிகழ்ந்தது அல்ல. மாறாக, ஈவிரக்கமின்றி நூற்றுக்கணக்கில், கொன்று குவிக்கப்பட்ட சகபோராளிகளினதும் மக்களினதும் அரசியல்தலைவர்களினதும் சடலக் குவியலில்தான் விடுதலைப் புலிகளின் தனித்தலைமை நிலைநாட்டப்பட்ள்ளது.

விடுதலை புலிகளினால் கொல்லப்பட்ட போராளிகள் அனைவரும் நமது மக்களின் ஒரு கூறுதான். நமது மக்களின் விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்பதற்காகவே, அவர்களும் போராட்டத்தில் பங்கேற்க முன்வந்தார்கள். அவர்களின் அன்றைய செயற்பாடுகள் மக்கள்விரோத பண்புகளை கொண்டிருந்தன என்பதோ அந்த அமைப்புக்கள் அனைத்தும் இன்று சிறிலங்கா அரசினதும் இந்திய அரசினதும் கைக்கூலிகளாக செயற்படுகின்றன என்பதோ அந்த அமைப்புக்களை விடுதலை புலிகள் அழித்ததையும் அவற்றின் அரசியல் செயற்பாடுகளை தடைசெய்திருப்பதையும் ஒருபோதும் நியாயப்படுத்தி விடாது.

ஒரு மக்கள் விரோத அமைப்பை அரசியல்ரீதியல் அகற்றுவது என்பது, அந்த அமைப்பை ஆயுதரீதியல் அழிப்பது அல்ல. மக்கள் மத்தியில் தமது அரசியலை தெளிவாக முன்வைப்பதினூடாகவும் தமது மக்கள் சார் செயற்பாட்டினூடாகவும் இத்தகைய மக்கள் விரோத அமைப்புக்களை, மக்கள் தாமாகவே நிராகரிக்க செய்ய கூடிய அரசியல் மரபுதான் உண்மையான ஜனநாயக முறைமையாக அமையும்.

நமதுதேசிய விடுதலை போராட்டத்தில், விடுதலை புலிகள் இயக்கம் தன்னை ஒரே தலைமையாக எவ்வளவு உறுதியாக, வன்மமாக நிலைநாட்டி வருகின்றதோ, அதே அளவுக்கு அந்த அமைப்புக்கு வெளியே, நமது மக்களின் சுயாதீனமான அரசியல் போராட்டங்கள் தீவிரமாகவும் அதிகரித்த அளவிலும் தொடர்ச்சியாகவும் இடம்பெற்று வருகின்றன. இம்மக்கள் போராட்டங்கள் அனைத்தும், நமதுதேசிய இயக்கத்தில் புதிய, பன்முக தலைமைகளும் போராட்ட வடிவங்களும் அவசியம்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதை தெளிவாக சுட்டி காட்டுகின்றன, நமது அரசியலில் ஜனநாயக முறைமைகள் உறுதியாக பின்பற்றப்பட வேண்டும் என்பதை அழுத்தமாக வலியுறுத்துகின்றன.

நமது சுதந்திரத்தின் தலைவாசலை நாம் அடைந்துள்ள இன்றைய நிலையில், நமது தேசிய இயக்கத்தில், மக்களின் கூட்டு பங்குபற்றல் முன்னெப்போதையும் விட தீவிரமாக அவசியப்படுகின்றது. நமதுதேசத்தின் இறுதி விடுதலைக்கும் நமக்கென புதிய சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார முறைமைகளை உருவாக்குவதற்கும் நமது மக்கள் அனைவரினதும் உணர்வுபூர்வமான பங்குபற்றல் அவசியமாகின்றது.

நமதுதேசிய இயக்கத்தில் மக்களின் உயிர்ப்பான கூட்டுப்பங்குபற்றலை சாத்தியமாக்குவதறகான அடிப்படை நிபந்தனை, நமது அரசியல் சூழலில் ஜனநாயக முறைமை உறுதியாக நிலைநாட்டப்படுவது தான். நமதுதேசத்திலுள்ள பல்வேறு சமூகசக்திகளும் தமது நலன்களையும் கோரிக்கைகளையும் முன்வைப்பதற்கும் அவற்றுக்கிடையே சமத்துவமான உரையாடலும் புரந்துணர்வும் ஏற்படுத்துவதற்குமான சூழல் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான், நாம் ஒரு புதிய, முன்னுதாரணமிக்க தேசமாக பரிணமிப்பதும் நமக்கென சொந்த, மக்கள்சாரம் கொண்ட ஜனநாயக குடியரசை நிர்மாணிப்பதும் விரைவில் சாத்தியமாகும். - வரதன்-

**சிங்கள...** ( 2ம்பக்க தொடர்)

நமது மக்களுக்கிடையில் பலமான இணைப்பு உருவாவேண்டும். வருங்காலமானது, நமக்கான தேசஅரசை கொண்டிருக்கப் போகும் காலமாக அமையவிருப்பதால் இந்த விடயங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகின்றன.

எல்லாவற்றிலும் பிரதானமான நமக்கென ஒரு அரசதிகாரம், ஆள் புல எல்லை நிறுவப்படும்போது, ஆக்கிரமிப்புபடைகளும் சிங்கள ஆதிக்கமும் அகற்றப்படும்போது திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் என்பது இன்றைய அல்லது கடந்த கால அதன் பாரதூரத்தன்மையை இழந்து விடும் என்பதையும் குறித்து கொள்வோம்..

தற்போது நமது விடுதலைப் போராட்டமானது, மற்றெல்லா விடயங்களிலும் முதிர்ச்சியான அணுகுமுறையை வெளிப்படுத்தி வருவது போல், நமது போராட்டத்தின் வெற்றியிலும் பலத்திலும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிக்கலான விடயத்திற்கும் ஒரு தீர்வை காண முடியும். அவ்வாறே காண்போம். - தருமு

# நம்விடுதலை காப்போம்!

ஆனையிறவு தாக்குதலில் விடுதலை புலிகள் பெற்றுள்ள மகத்தான வெற்றியினூடாக, நமது விடுதலைக்கான கதவு திறக்கப்பட்டு விட்டது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நமதுமக்கள் எந்த இலட்சியத்திற்காக போராடி வந்திருக்கின்றார்களோ, அந்த இலட்சியம் இதோ நிறைவேறியிருக்கின்றது. ஆம்! நமதுதேசம் வெற்றி பெருமிதத்துடன் விடுதலைப் பாதைக்குள் நுழைந்து விட்டது. நமது சுதந்திரத்தின் தலை வாசலில் இப்போது நாம் உறுதியாக காலடி வைத்து விட்டோம். சிங்கள இராணுவத்தின் மீது, விடுதலை புலிகள் பெற்றிருக்கின்ற தீர்க்கமான வெற்றியின் மூலம், நமது விடுதலை உலகெங்கும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஆனையிறவில் முழங்கியுள்ள வெற்றி முரசம், உலகம் முழுதும் வியப்புக்குரிய பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி கொண்டிருக்கின்றன.

இந்த மகோன்னத வெற்றியை நிறைந்த மகிழ்வுடன் நாம் கொண்டாடுகின்ற அதேநேரத்தில், இவ்வெற்றியை நமது இறுதி விடுதலை வரை நாம் முன்னெடுத்து செல்ல வேண்டும். விடுதலை புலிகளின் தீரமிக்க, துல்லியமான தாக்குதல்களினால் நமது மண்ணிலிருந்து துடைத்தெறியப்பட்டுள்ள சிங்களப் படைகள், சிறிலங்காவை நோக்கி ஏற்கெனவே ஓட்டம் எடுத்து விட்டன. நமது மண்ணிலிருந்து சிங்கள படைகள் வெளியேறுவது, மேலும் மேலும் தீவிரமடையும். தமது சுவடுகள் எதுவுமின்றி, கடைசி சிங்கள படையினனும் நமது மண்ணிலிருந்து வெளியேறுகின்ற அந்த அற்புத தருணம் நமது மண்ணில் விரைவில் நிகழ்ந்தேறும்.

எனினும், சிங்கள படைகள் நமது மண்ணிலிருந்து வெளியேறுவதால் மட்டும் நமது பூரண விடுதலை உறுதிப்படுத்தப்பட மாட்டாது. ஏனெனில், சர்வதேச ஆதிக்க அரசுகளுடன் நெருக்கமான உறவுகளை கொண்டிருக்கின்ற சிறிலங்கா அரசு, நமது விடுதலையை தடுக்க அனைத்து வழிகளிலும் செயற்படும். இந்த ஆதிக்க அரசுகளின் உதவியுடன் மீண்டும் நமது மண்ணை ஆக்கிரமிக்கவோ, அல்லது நமது தேசசுதந்திரம் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுவதை தடுக்கவோ சிறிலங்கா அரசு நிட்சயமாக முயற்சிக்கும். இத்தகைய முயற்சி, நமது சுதந்திரமும் நமக்கான சொந்த அரசும் சர்வதேச அங்கீகாரம் பெறுவதை தாமதிக்க செய்யலாம். இத்தகைய நிலை உருவாவதை தவிர்ப்பதற்கும் தடுப்பதற்கும் நாம் இப்போதிருந்தே, இக்கணத்திலிருந்தே உறுதியுடன் செயற்பட வேண்டும்.

முதலாவதாக, தேசம் தழுவிய ரீதியில் நமதுமக்களும் விடுதலை புலிகளும் உறுதியாக இணைந்து போராட வேண்டும். இத்தகைய இணைவின் மூலம், விடுதலை புலிகள் பெற்றுள்ள வெற்றி, நமது தேசத்தின் வெற்றியே என்பதை நாம் பகிரங்கமாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் வெளிப்படுத்த வேண்டும். விடுதலை புலிகள் பெற்று வருகின்ற வெற்றி வெறும் இராணுவ வெற்றி அல்ல என்பதையும் அது நமது தேசவிடுதலையை சாத்தியமாக்கியுள்ள மாபெரும் அரசியல் வெற்றி என்பதையும் நாம் உரத்து முழங்க வேண்டும்.



இரண்டாவதாக, நம்மத்தியில், தேசம் தழுவிய வெகுஜன எழுச்சி தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும். தென்தமிழீழம், மத்தியதமிழீழம், வடதமிழீழம் என நமது தாயகத்தில் எங்கும் வாழ்கின்ற நமது மக்களிடையே உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் அதிகரித்த அளவிலும் வெகுஜன போராட்டங்கள் வெடித்து கிளம்ப வேண்டும். நாம் எந்தளவுக்கு வெகுஜனரீதியில் கிளர்ந்தெழுகின்றோமோ, அந்தளவுக்கு நமது விடுதலை பாதுகாக்கப்படும், அந்தளவுக்கு நமது சுதந்திரம் சர்வதேச அக்கறையையும் அனுதாபத்தையும் அங்கீகாரத்தையும் பெறும். விடுதலை புலிகள் பெற்று வருகின்ற மாபெரும் இராணுவ வெற்றிகளை, நமதுமக்களின் அரசியல் விடுதலையிலிருந்து பிரித்து காட்ட சிறிலங்கா அரசும் அந்நிய ஆதிக்க அரசுகளும் எடுக்க கூடிய அத்தனை முயற்சிகளையும் தடுக்கின்ற வலிமைமிக்க அரணாக, நமதுமக்களுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையேயான உயிரோட்டமுள்ள இணைவு அமையும்.

மூன்றாவதாக, நமது மண்ணில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த வரலாற்று திருப்பமிக்க சூழலில், புலம்பெயர்ந்து வாழ்கின்ற நமது மக்களின் அரசியல் பங்கேற்பு என்றுமில்லாத அளவுக்கு அவசியமாகின்றது. புலம்பெயர்ந்துள்ள நமது மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற வெகுஜன எழுச்சியானது, நமதுதேசத்தின் விடுதலை பாதுகாக்கப்படுவதிலும் நம்தேசத்தின் சுதந்திரம் அங்கீகரிக்கப்படுவதிலும் முக்கிய பாத்திரம் வகிக்க கூடியது. நமது தாயக மண்ணில் நமதுமக்களும் விடுதலை புலிகளும் வெளிப்படுத்தி வருகின்ற அர்ப்பணிப்புகளுடனும் தியாகங்களுடனும் போராட்ட வலிமையுடனும் தம்மை இரண்டற இணைத்து கொள்ள வேண்டிய இறுதித் தருணத்தை புலம்பெயர்ந்துள்ள நமதுமக்கள் அடைந்துள்ளார்கள்.

நமது வரலாற்றில் மிகமுக்கியமான கட்டத்தை நாம் அடைந்து விட்டோம். சுதந்திர காற்றின் சுவாசத்தை நுகர்கின்ற அந்த உயரிய தருணத்தை நாம் நெருங்கி விட்டோம். நாம் தொட்டு விட்ட, நாம் தழுவி விட்ட, நாம் நுகர்ந்து விட்ட நமது விடுலையை, நமது சுதந்திரத்தை, நமதுதேசத்தையே அரணாக சமைத்து இறுதிவரை காப்போம். முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்ட சிங்கள படைகள், ஆதிக்க அரசுகளின் ஆதரவுடனோ, அல்லது ஆதிக்க அரசுகள் நேரடியாகவோ நமது மண்ணை மீண்டும் ஆக்கிரமிக்க முட்டாள்தனமாக முற்படுமாயின், அது அவற்றின் தற்கொலைக்கு சமானம் என்பதை நாம் நிரூபிப்போம். விண்ணை விஞ்சும் வலிவுடன் நாம் அனைவரும் ஒரே அணியில், ஒரேதேசமாய் திரண்டெழுவோம்!

நாம் இன்றே, இக்கணமே உறுதி மொழி எடுப்போம்:

*வாழ்ந்தாலும் நாம் தேசமாய் வாழ்வோம்!*

*வீழ்ந்தாலும் நாம் தேசமாய் வீழ்வோம்!*

**- வரதன்-**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நமக்கான தேசஅரசை நிர்மாணிப்போம்!

நமது பன்நூற்றாண்டுகால வரலாற்றில், மிகச் சிறந்த தருணங்களில் ஒன்றிற்குள் இப்போது நாம் நுழைந்து விட்டோம். நமது விடுதலையும் சுதந்திரமும் நம்மை தழுவி கொண்டிருக்கின்ற இந்த கணம், நம் வரலாற்றில் என்றும் அழியாது நிலைத்து நிற்கும் மாண்பை கொண்டிருக்கின்றது. புத்தெழுச்சிமிக்க இந்த நாட்களில், நம்தேசமெங்கும் பொங்கி பிரவகிக்கும் வெற்றி களிப்பும் சுதந்திர உணர்வும் நம்மக்கள் மத்தியில் மங்கா நினைவுகளாய் என்றும் நீடித்து நிலைக்கும். புதிய ஆண்டின், புதிய நூற்றாண்டின், புதிய ஆயிரம் ஆண்டின் முதல் தேச விடுதலை என்ற வரலாற்று கௌரவத்தை நமது விடுதலை பெறவிருக்கின்றது.

இனி, நமக்கு முன்னே மிகப் பெரும் பொறுப்புகள் காத்து நிற்கின்றன. நமக்குரிய பொருளாதார முறைமையை உருவாக்குதல், நமக்கான கலாச்சார வாழ்வை செப்பனிடுதல், சகதேசங்கள் மற்றும் சமூகங்களுடனான உறவுகளை பேணுதல், சர்வதேச உறவுகளை உறுதியாக தாபித்தல்...என நாம் நிறைவேற்ற வேண்டியுள்ளவை விரிந்து செல்கின்றன. இவை அனைத்திலும் முதன்மையானதாக, நமக்கான தேசஅரசை நிர்மாணித்தல் என்பது, உடனடிக் கடமையாக முன்னிற்கின்றது.

நமதுமக்கள் அனைவரினதும் அடிப்படை உரிமைகளை தெளிவாக உறுதிப்படுத்துகின்ற ஒரு மக்கள் குடியரசை அமைப்பதில் உணர்வுபூர்வமான அக்கறையை நாம் குவிக்க வேண்டும். பலநூற்றாண்டுகளாக, ஐரோப்பிய அரசுகளின் ஆக்கிரமிப்பின் கீழும் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பின் கீழும் அடக்கப்பட்டிருந்த மரபை கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். இவ்வாறு தொடர்ச்சியான ஆக்கிரமிப்பிற்கும் அடக்குமுறைக்கும் உட்பட்டிருந்த நிலைக்கு முற்றிலும் மாறாக, ஒரு சுதந்திர அரசை நிறுவுவது என்பது, ஆழ்ந்த சமூக அக்கறையை கோருகின்ற நிகழ்வாக இருக்கின்றது.

நமது விடுலையும் நமக்கான குடியரசும் எளிதாகவோ, இயல்பான முறையிலோ எமக்கு கிடைக்கவில்லை. மாறாக, பல நூற்றாண்டு கால அடக்குமுறைகளுக்கு எதிராக நமதுமக்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ள வீரஞ்செறிந்த போராட்டத்தின் விளைவுகளாகவே இவை சாத்தியமாகியுள்ளன. நமது தேசவிடுதலையையும் நமது தேச அரசையும் எதார்த்த உண்மைகளாக நிகழ்த்தியிருப்பதில், நமதுமக்களின் வெவ்வேறு பிரிவனர்களும் வகித்து வந்திருக்கின்ற மகத்தான பாத்திரம் ஒருபோதும் மறக்கப்பட்டு விடக் கூடாது. விவசாயிகள், மீனவர்கள், பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள், அடக்கப்படுகின்ற பிரிவினர், உழைப்பாளர்கள், அரச ஊழியர்கள், விளிம்புநிலை மக்கள்... என நமதுதேசத்தின் மிகப் பெரும்பாலான பிரிவினர்களின் அர்ப்பணிப்புகளினாலும் வலிமையினாலும் அவர்களுக்குள் உறுதியாக நிலைத்திருந்த விடுதலை உணர்வினாலுமே நமதுதேச விடுதலை எதார்த்தமாகியுள்ளது.

எனவே, நாம் உருவாக்கவுள்ள மக்கள் குடியரசானது, இந்த மக்கள் பிரிவினர் அனைவரினதும் அடிப்படை உரிமைகளையும் நலன்களையும் உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும். இந்தமக்களின் கருத்துக்களையும் அனுபவங்களையும் திரட்டுவதினூடாகவும் இவர்களின் பூரண அங்கீகாரத்தை பெறுவதினூடாகவும் நமதுதேசத்திற்கான அரசுமுறைமை உருவாக்கப்பட வேண்டும். நமது தேசஅரசு என்பது, நமதுமக்களின் உரிமைகளினதும் நலன்களினதும் சாரமாக அமைய வேண்டும்.

விடுதலை போராட்ட வரலாற்றில், நமது போராடடம் ஒரு மகத்தான உதாரணமாக பதிக்கப்படவுள்ளது. இதேபோன்று, நாம் உருவாக்குகின்ற குடியரசும் தேசஅரசுகளின் வரலாற்றில் ஒரு புதிய அனுபவமாக, ஒரு புதிய நிகழ்வாக அடையாளம் காணப்படுவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். வரலாற்றில் வெற்றி பெற்ற ஒவ்வொரு புரட்சியும் ஒவ்வொரு விடுதலைப் போராட்டமும் அவற்றின் வெற்றியின் பின்னர், அவற்றை தாங்கி நிற்கின்ற மக்களை அதிகாரம் நீக்கம் செய்துள்ள அனுபவத்தையே வெளிப்படுத்தியுள்ளன. இந்த பொதுப் போக்கிலிருந்து நாம் திடமாகவும் உணர்வுபூர்வமாகவும் விலக வேண்டும். ஆக்கிரமிப்பு அரசுகளினதும் படைகளினதும் அத்தனை அடக்குமுறைகளையும் கொடுரங்களையும் தாங்கி, நமது விடுதலை போராட்டத்தை மாபெரும் வலிவுடன் தாங்கி வந்திருக்கின்ற நமதுமக்களின் - விவசாயிகளின், மீனவர்களின், பெண்களின், அடக்கப்படுகின்ற பிரிவினரின், உழைக்கும் மக்களின், மாணவர்களின், இளைஞர்களின், அரசஊழியர்களின், விளிம்புநிலை மக்களின் - உரிமைகளும் நலன்களும் நமது குடியரசின் அடித்தளமாக அமைய வேண்டும்.

ஆம்! நமக்கான குடியரசை, நமதுமக்களுடன் இணைந்து, நமது மக்களுக்காகவே, நமது மக்களினால் படைப்போம்!

*- வரதன் -*




விடுதலைக்கொடி நம் தாயகத்தில் பறந்திடும் நாட்கள் நெருங்கி வருகின்றன. மனிதர்களுக்கேயுரித்தான மகிழ்ச்சியாரவாரத்திலும் உணர்ச்சிக் கொந்தளிப்பிலும் நாம் திளைத்திடுவதன் மறுபுறம், புதிய அரசை ஸ்தாபிக்கப் போகும் தேசத்தினருக்குரிய பொறுப்புகளும் கடப்பாடுகளும் மலைபோல் நம்முன் நிற்கின்றன என்பதிலும் நாம் அக்கறையுடனிருப்போம். இன்று நமது மக்களில் சுமார் ஒன்றரை இலட்சம் பேர்வரையில் சிறிலங்காவின் தலைநகரிலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். தொழிலுக்காக அங்கு சென்றவர்கள் ஒருசாரார். யுத்தத்தினிமித்தம் இடம் பெயர்ந்து சென்றவர்கள் ஒரு சாரார். வெவ்வேறு காலகட்டங்களிலும் வெவ்வேறு தேவைகளினிமித்தமும் சிறிலங்காவுக்கு இடம் பெயர்ந்து, அங்கு வாழ்ந்துவரும் இவர்கள் அனைவரும் எமது தேசத்தவராவர். பேருரு கொண்டிருக்கும் பேரினவாதத்தின் அச்சுறுத்தலை நேரடியாக அனுபவிப்பவர்களாகவும், பேரினவாத போக்குகளை அருகிலிருந்து அடையாளங் கண்டு அதை உணர்வு பூர்வமாக வெறுப்பவர்களாகவும், இதன் காரணமாக தமிழீழ போராட்டத்தின் ஒவ்வொரு வெற்றித் தாக்குதலையும் ஆவலுடன் வரவேற்கின்றவர்களாகவும் இவர்கள் இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகளும் தேச அரசு அமைவதும் மறுபுறம் சிங்களப் படைகளின் தொடர்ச்சியான படுதோல்விகள், உயிரிழப்புகள் போன்றன தளைத்தோங்கியிருக்கும் சோவினிச சக்திகளை வன்மம்கொள்ளச் செய்யும். இச்சக்திகளின் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீதான காழ்ப்புணர்வு, தமது கையாளாகாத்தனம், இனக்குரோதம் யாவும் சிறிலங்காவில் வாழும் தமிழ் மக்கள் மீது வன்முறைத் தாக்குதல் நடாத்த இவர்களை உந்தித் தள்ளும். சிங்கள வீரவிதான மற்றும் அண்மையில் உருவான சிங்கள உருமய போன்ற நிறுவனமயப்பட்ட பேரினவாத பாதுகாவலர்கள். இளைஞர்களையும் குண்டர்களையும் திரட்டி திட்டமிட்டே தமிழின அழித்தொழிப்பை மேற்கொள்வார்கள் என நாம் எதிர்பார்த்திருக்க வேண்டும். சில பிக்குமார் உட்பட அரசாங்கத்திலிருக்கும் ஒரு சில அமைச்சர்கள், மந்திரிகள் கூட இதற்கு பின்புலமாயிருப்பர்.

1996 முற்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து, யாழ் கோட்டைக்கு முன் சிங்கக் கொடியை அனுருத்த ரத்வத்த ஏற்றிய அதே நேரம், சிங்களப் பிரதேசங்களில் வெடிகொளுத்தி சில மகிழ்ந்தனர். மலையகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டதுடன் அவர்களது கடைகள் எரிக்கப்பட்டன. தமது கடைகளின் முன் சிங்கக் கொடியை ஏற்றுமாறு தமிழர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவ்வாறு தமது ஆக்கிரமிப்பு வெற்றியின் கொண்டாட்டத்தை மக்கள் மீது வன்முறையைப் பிரயோகிப்பதனூடாக ஆணவத்துடன் வெளிப்படுத்தினர். இதே போன்ற வெளிப்பாடுகள் தோல்வியின் உச்சத்திலும் பேரினவாத பிரிவினரிடமிருந்து வெளிப்படாதென்றில்லை. அவமானத்திற்கு இலக்கான தோற்றோடிய படைகளும் பேரினவாத சக்திகளுடன் இணைந்து சிறிலங்காவில் வாழும் தமிழரையும் மலையகத் தமிழரையும் இன வன்முறைகளுக்கும் படுகொலைக்கும் உட்படுத்துவதன் மூலம் தமது குரூரத்தை தீர்த்துக்கொள்ள முயல்வர். இவ்வாறான நிலையில் சிறிலங்காவில் வாழும் நமது மக்களை பாதுகாக்கும் பொறுப்பு நம்மையே சார்ந்துள்ளது.

இன்று தென்தமிழீழத்தின் சனத்தொகையில் மூன்றிலொரு வீதத்தினர் சிங்கள மக்களாவர். இவர்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை நாம் ஒரு தேசமாக பொறுப்பேற்க வேண்டும். நமது அரசியல் தலைமை இந்த உத்தரவாதத்தை சிங்கள மக்களுக்கும் சிறிலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் பகிரங்கமாக அறிவித்திட வேண்டும். இவ்வாறு நாம் செயற்படுவதன் மூலமாக, சிறிலங்காவிலுள்ள ஈழத் தமிழர்களையும் மலையகத் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பாதுகாக்கின்ற பொறுப்பு சிங்கள தேசத்துக்கும் சிறிலங்கா அரசுக்கும் உரியது என்ற நிர்ப்பந்தத்தை உருவாக்க வேண்டும். இவ்வாறாக இருதரப்பு தலைமைகளுக்கும் இடையேயான இத்தகைய ஒப்பந்தங்கள் மூலம் மக்களை அழிவிலிருந்து பாதுகாத்திட முடியும். நமது இதுவரைகால போராட்டத்தின் முதிர்ந்த அனுபவங்களைப் பயன்படுத்துவதனூடாக அனாவசிய மனித இழப்புகளைத் தவிர்த்து, வெகுஜனங்களைப் பாதுகாத்திடும் அடிப்படை கொள்கையின் பாற்பட்டு செயற்படுவது நம்மனைவரினதும் கடப்பாடாகும்.

*- சியா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம்எழுச்சி.

ஜோதி: "என்ன அன்பு, ரொம்பவும் மகிழ்ச்சியா இருக்கிறாய்?"

அன்பு: "இருக்காதா பின்னே? புலிகளின் இந்த வெற்றிக்கு மகிழ்ச்சியடையாம, வேறு எதுக்கு மகிழ்ச்சியடைவது?"

ஜோதி: "ஓமோம். எனக்கும் மகிழ்ச்சி பொறுக்கேலதான். யாருடனாவது சந்தோசத்தை பகிர்ந்து கொள்ளணும் என்டு துடிச்சிட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். பார்த்தியா அன்பு, நம்ம பொடியன்களும் பொம்பள புள்ளகளும் எவ்வளவு கஷ்டப்பட்டு, தியாகங்கள் செய்து இந்த வெற்றிய சாதிச்சிருக்காங்க. அவங்களுக்கு நம்மதேசம் எவ்வளவு கடமப்பட்டிருக்கு!"

அன்பு: ஓம். வயசில சின்னாக்களா இருந்தும், நம்மதேசத்தின்ட விடுதலய இவங்கதானே சுமந்து வந்திருக்காங்க. இவங்களோட, இப்ப போராட்டத்தில ஈடுபட்டிருக்கிற எல்லைகாவல் படையச் சேர்ந்தவங்களயும் நம்மதேசம் கௌரவிக்கணும்."

ஜோதி: இவங்கட தியாகத்தையும் இதுவரைக்கும் நம்ம விடுதல போராட்டத்தில இறந்துபோன எல்லாருடைய தியாகத்தயும் நம்மதேசம் ஒருபோதும் மறக்க கூடாது. அதுதான் அவங்களுக்கு நாம் செய்யிற பெரிய நன்றிக்கடனா இருக்கும்."

அன்பு: "நீ சொல்றது கரி ஜோதி. இப்ப கிடச்சிருக்கிற வெற்றி வெறும் இராணுவ வெற்றி மட்டும் இல்ல. இந்த வெற்றியோட நம்ம தேசமும் விடுதலையடைஞ்சிட்டுது."

ஜோதி: "நம்மதேசம் விடுதலையடைஞ்சுட்டென்டு எப்பிடி நீ சொல்வாய்? யாழ்ப்பாணத்திலயும் கிழக்கிலயும் இன்னமும் ஆமி இருக்குத்தானே?"

அன்பு: "ஆமி இருக்குத்தான். ஆனா, ஆமி இருக்குதா இல்லியா என்பத கொண்டு நம்ம விடுதலையை தீர்மானிக்க கூடாது. சிங்கள ஆமியால நம்மதேசத்தில இனிமே இருக்க முடியுமா, நம்மதேசத்தை கட்டுப்படுத்த முடியுமா என்பத கொண்டுதான் நம்ம விடுதலய நாம தீர்மானிக்கணும்."

ஜோதி: "நீ சொல்றது சரிதான். ஆனா, ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஆமி இங்க இருப்பது, எங்கட விடுதலய பாதிக்காது என்டு சொல்றியா?"

அன்பு: "அப்படி சொல்லேல. கடைசி சிங்கள ஆமியும் நம்ம மண்ணிலிருந்து போனபின்புதான் நம்ம விடுதலயும் சுதந்திரமும் முழுமையடையும். ஆனா, நான் சொல்ல வாறது என்னென்டா, நம்ம தேசத்தின் மேல சிங்கள ஆமி கொண்டிருந்த கட்டுப்பாடு ஆனையிறவு முகாம் வெற்றியோட அகற்றப்பட்டுட்டுது. இன்னும் கொஞ்ச நாட்கள்ல நம்மீதான சிங்களஆமியின் கட்டுப்பாடு முழுமையாக இல்லாம போயிடும்.

ஜோதி: "அப்படியென்டா ஆனையிறவு முகாம் அவ்வளவு முக்கியத்துவமானது என்டா சொல்றா?"

அன்பு: "ஓமோம்! நம்மமண்ணில உள்ள சிங்கள இராணுவ முகாம்களில, இருபதாயிரம் படையினரை கொண்ட முகாம் ஆனையிறவு மட்டும்தான். இது அமைஞ்சிருக்கிற இடத்தை பார். இஞ்சிருந்து யாழ்ப்பாணத்தையும் வன்னியையும் ஒரே நேரத்தில கட்டுப்படுத்தலாம். இதை புலிகள் கைப்பற்றியிருக்கிறதால, யாழ்ப்பாணத்தின் மீதும் வன்னியின் மீதும் ஆமியின்ட கட்டுப்பாடு அனேகமா முழுமையா பலவீனப்பட்டுட்டுது. இனிமே, ஆமி யாழ்ப்பாணத்தில இருந்து எப்ப வெளியேறுவது என்பதத்தான் யோசிக்கணும்."

ஜோதி: "ஆனையிறவுமுகாம் போர்த்துக்கீசரின் காலத்திலேயே உருவாக்கப்பட்டதா படித்த ஞாபகம் இருக்குது. அப்படிப் பார்த்தா, நீண்டகாலமா நம்மசனங்கள ஆக்கரமிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிற இராணுவ முகாமத்தான் இப்ப புலிகள் பிடிச்சிருக்கிறாங்க இல்லியா. ஆனா, கிழக்கில இன்னமும் ஆமி இருக்குத்தானே?"

அன்பு: "எங்க இருக்கிறாங்க? நகரப்பகுதிகள்ல மட்டும் பகல்ல நடமாடி திரியிறாங்க. இரவில அதுவும் இல்ல. கிழக்கில பெரும்பாலான பிரதேசம் ஆமியின்ட பிடியிலிருந்து ஏற்கனவே விடுவிக்கப்பட்டுட்டுது. இனிமே பாரன், கிழக்கில இருக்கிற இன்னும் பல முகாம்கள் விரைவில மூடப்படும்.

ஜோதி: "கிழக்கில இருக்கிற ஆமி எதித்து நிற்காதா?"

அன்பு: "அது சாத்தியப்படாது. ஏனென்டா, இராணுவத்தின்ட உறுதி என்பது, ஒரு சங்கிலியின் உறுதி மாதிரி. சங்கிலியில ஏதாவது ஒரு கண்ணி அறுந்திட்டா, ஏனைய பகுதிகள் பலவீனமடைஞ்சுடும். அப்பிடித்தான் ஆமியின் பலமும். ஒரு முகாம் நொறுக்கப்பட்டா, ஏனைய முகாமகள் பலவீனமடைய தொடங்கிடும். இப்ப ஆனையிறவில ஏற்பட்டிருக்கிற தோல்வி, வெறும் கண்ணி அறுந்த விடயமில்ல. சங்கிலியின் அடிமுடிச்சே அறுக்கப்பட்டுட்டுது. இனிமே சிங்கள படைகள் சிதறி ஓடுவதுதான் மிச்சம்."

ஜோதி: "நீ ரொம்ப எளிதா சொல்றா. ஆமி அவ்வளவு லேசா இங்கிருந்து வெளியேறாது என்டு நான் நினைக்கிறன்."

அன்பு: "ஆமி வெளியேறாது என்டு நீ சொல்றா. ஆமி வெளியேறும் என்டு நான் சொல்றேன். நான் முற்றிலும் நம்பிக்கையோட சொல்றேன். அப்பிடி நடக்கணும் என்டு சொல்றேன். எந்தவொரு ஆக்கிரமிப்பு படையும் அந்நிய மண்ணில நிற்பதென்டா, அது அந்த படைகளுக்கிடையிலான பிணைப்பிலும் அது பெறுகிற வெற்றியிலுந்தான் தங்கியிருக்குது. இந்த பிணைப்பு அறுபட்டு, அப்படைக்கு தோல்வி மேல தோல்வி கிடைச்சா, அந்த படையின் மனவுறுதி முற்றாக சீர்குலைஞ்சிடும். அதுக்கு பிறகு நீண்ட காலத்துக்கு அந்த ஆக்கிரமிப்புப்படை தாக்கு பிடிக்காது. சிங்கள ஆமிக்கும் இங்கு இதுதான் நடந்து வருகுது."

ஜோதி: "நீ சொல்றதும் சரிதான். 1995லே நடந்த முல்லைத்தீவு தாக்குதல்ல இருந்து ஆனையிறவு தாக்குதல் வரை ஆமி தொடர்ந்து தோல்வியடைஞ்சுதான் வருது. இதிலயும் ஒரு விஷயம் இருக்குது. புலிகளின் முன்னய வெற்றிகளுக்கிடையில ஒரு நீண்டகால இடைவெளி இருக்கும். ஆனா வன்னி தாக்குதல்ல என்ன நடந்துது? இரண்டு கிழமைக்குள்ள வன்னியிலிருந்த முழு ஆமிகேம்பையும் புலிகள் தாக்கி அழிச்சிட்டாங்க இல்லியா? அதுக்குப்பிறகு பார். எவ்வளவு கெதியா, ரெண்டு நாள்ல ஆனையிறவை முடிச்சிட்டாங்களே. ஆமியின் பலம் முற்றாக உடைஞ்சிட்டுது என்பதைத்தான் இது காட்டுது. விரவில ஆமி நமது மண்ணிலிருந்து வெளியேறும் எண்டு நீ சொல்றது சரிதான். இருந்தாலும் ஆமி இங்கிருந்து மிக விரைவாக வெளியேறுவதற்கு இங்க இன்னொரு விஷயம் நடக்கணும என்டு நான் நினைக்கிறன்."

அன்பு: "என்ன அது?"

ஜோதி: "நம்ம மத்தயில தீவிரமான வெகுஜன எழுச்சி உடனடியாக இடம்பெற வேணும். ஆமிய வெளியேறும் படியும் சர்வதேச சமூகங்கள் நம்ம சுதந்திரத்த அங்கீகரிக்கும்படியும் கோரி, நாம தொடர்ச்சியாக வெகுஜனரீதியல போராடணும்."

அன்பு: "ஓமோம்! ஒவ்வொருஆக்கிரமிப்பு படையும் தான் ஆக்கிரமித்துள்ள மக்கள பற்றியே எப்போதும் பயப்படுது. ஏனென்டா, ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆமியை விட, பொதுமக்கள் தான் அதிகமாக இருக்கிறாங்க. குறைஞ்சது ஒரு ஆமிக்கு நூறு பொதுமக்கள் இருப்பாங்க, இல்லியா? இந்த மக்கள் ஒன்று திரண்டால் அதுக்கு பிறகு ஆக்கிரமிப்புப்படைகள் நிம்மதியாக இருக்காது. பீதியடைஞ்சிடும்."

ஜோதி: "இப்ப, விடுதலை புலிகள் தொடர்ச்சியா வெற்றியடைஞ்சு வாறதாலும் யாழ்பாணத்தை எந்த நேரத்திலும் விடுவிக்க கூடிய நிலயில இருப்பதாலும் கிழக்கிலுள்ள ஆமி பெரும்பீதியில்இருக்கின்றது. தம்மீது எந்தநேரத்தல தாக்குதல் நடக்கும் என்டு ஒவ்வொரு படையினனும் அஞ்சுகிறான். இப்படியான நேரத்தில் நம்ம சனங்களிடையே வெகுஜன போராட்டங்கள் ஏற்படுமென்டா ஆமி கடுமையா பயப்படும். அதனால, அவர்கள்ல கணிசமானோர் தாமாகவே ஓடியும் விடுவாங்க."

அன்பு: "இப்பவே ஆமிக்காரங்க நம்மட ஆக்களின் சைக்கிள வாங்கி கொண்டு ஓட்டம்பிடிக்கிற சம்பவங்கள் அதிகரிச்சு வருது. உடனடியா நம்ம மத்தயில வெகுஜன போராட்டத்த உருவாக்கணும்."

ஜோதி: "நம்ம சனங்க ஏற்கனவே இத்தகைய போராட்டங்கள்ல ஈடுபட்டுத்தான் வாறாங்க. நம்ம மீனவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெண்கள்..என்று நம்மசனங்க தங்கட உரிமைக்காக போராடி வாறாங்க. மட்டக்களப்பில் பாஸ் முறைய எதித்தும் திருகோணமலயில நேவியின்ட தாக்குதல எதித்தும் யாழப்பாணத்தில மீன்பிடிக்க கோரியும் மக்களை கேடயமாக ஆமி பயன்படுத்துவத எதித்தும்நம்மசனங்க உறுதியா போராடித்தான் வாறாங்க."

அன்பு: "இப்ப செய்ய வேண்டியது என்னென்டா, இத்தகைய போராட்டங்கள் எல்லாம் ஒரேநேரத்தில, ஒன்று திரண்டு, தொடர்ச்சியாக நடத்தப்படணும். தனியே தங்கட உரிமைகளுக்காக மட்டுமில்லாம, ஆமி வெளியேறணும் என்று கோரியும், நமது சுதந்திரம் அங்கீகரிக்கப்படணும் என்று கோரியும் நாம தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வேணும்."

ஜோதி: "நம்மட சனங்கள்ல இருந்துதானே புலிகள் இயக்கத்திற்கு பொடியன்களும் பொம்பளபிள்ளைகளும் போறாங்க. அப்ப புலிகள் இயக்கத்தின்ட பலம் நம்ம சனங்களின்ட பலம்தானே. யுத்தகளத்தில எங்களால இவ்வளவு கெட்டித்தனமா போராட முடியுமென்டா, எங்களால வெகுஜன போராட்டங்கள்லயும் வெற்றிகரமா போராட முடியும்."

அன்பு: உண்மதான் ஜோதி. இன்னும் சில நாட்கள்ல பாரேன், நமதுசனங்கள் மத்தியிலிருந்து எத்தகைய எழுச்சி ஏற்பட போகுது என்டு. அப்ப தெரியும் நம்மசனங்களின் வலிமை."

ஜோதி: "அப்பிடியொரு எழுச்சியை நாம அனைவரும் சேர்ந்தே உருவாக்குவோம். ஆமியை வெளியேற்றுவதோட, நம்ம சுதந்திரத்தையும் உலகம் ஏற்கும்படி செய்வோம்."

அன்பு: "ஓம்! நமக்கு இப்ப கிடச்சிருக்கிற இந்த வெற்றிய, நம்ம இறுதி விடுதல வரை நாம கொண்டு போகணும். அதுதான் நாம உடனடியா செய்ய வேண்டியது."

ஜோதி: "நாம கதைச்சது போதும். மற்றவங்களோடும் கதைச்சு பார்ப்போமா?"

அன்பு: "சரி. இப்பவே போவம்."

- சேவியர். -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org

# சுதந்திரத்தின் தலைவாயிலில்!

ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் பெற்றிருக்கின்ற மகத்தான வெற்றியும் அதன் பின்னர் அவர்கள் பெற்று வருகின்ற தொடர் வெற்றிகளும் நமது விடுதலைப் பேராட்ட வரலாற்றில் மாபெரும் திருப்புமுனையாக அமைந்திருக்கின்றன.

முதலில், இந்த வெற்றிகளை நாம் அனைவரும் ஒரே தேசமாக இணைந்து பெருமிதத்துடன் கொண்டாடுவோம். ஆனையிறவு முகாமின் வீழ்ச்சியானது வெறுமனே ஒரு இராணுவ முகாமின் வீழ்ச்சியை மட்டும் குறிக்கவில்லை. மாறாக, தொடர்ச்சியான கொலனித்துவ ஆதிக்கத்தின் இராணுவக் குறியீடாகவும் நமது மக்களை வன்முறை ரீதியாக பிரித்து வந்துள்ள ஒரு இராணுவ அரணாகவும் அமைந்திருந்த பிரமாண்டமான படைத்தளம், முற்றாக கெல்லி எறியப்பட்டிருப்பதை இது குறிக்கின்றது. இந்த முகாம் வீழ்த்தப்பட்டதானது, நமது விடுதலைக்கான கதவு விரியத் திறக்கப்பட்டிருப்பதை பெருமிதத்துடன் அறிவித்திருக்கின்றது.

1977க்குப் பின்னர் நமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்திருக்கின்ற மிகப் பெரும் நிகழ்வாக இவ்வெற்றி திகழ்கின்றது. 1977த் தேர்தலில் நமது மக்களினால் அங்கீகரிக்கப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையானது, நடைமுறைச் சாத்தியமாவதை துலாம்பரப்படுத்தியுள்ள வரலாற்று நிகழ்வாக ஆனையிறவு வெற்றி விளங்குகின்றது. திட்டமிட்ட, நீண்ட, கடினமான தொடர் நடவடிக்கைகளினதும் அளவற்ற அர்ப்பணிப்புக்களினதும் இழப்புக்களினதும் திரட்சியாக இந்த வெற்றி சாத்தியமாக்கப்பட்டுள்ளது. எமது சுதந்திரத்தின் தலைவாயிலை நாம் அடைவதற்கு காரணமாகி இருந்த இந்த வெற்றிகளை சாதித்து வருகின்ற விடுதலைப் புலிகளுக்கு தமிழீழ மக்கள் கட்சி தனது புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

இந்தப் போரில், விடுதலைப் புலிகளும் எல்லைக் காவல்ப் படையைச் சேர்ந்த மக்களும் நேரடியாக இணைந்து கொண்டிருப்பதானது நமது விடுதலைப் போராட்டத்தின் முக்கிய நிகழ்வாக அமைந்திருக்கின்றது. அண்மைக் காலங்களில், சிறிலங்கா அரசுக்கும் சிங்களப் படைகளுக்கும் எதிராக நமது மக்கள் மத்தியில் அதிகரித்து வந்திருக்கின்ற வெகுஜனப் போராட்டங்களின் இன்னுமொரு வீரமிக்க வெளிப்பாடாக, நமது மக்கள் ஆயுதப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்று வருவது அமைந்திருக்கின்றது. வரலாற்றுப் பெருமைமிக்க இந்த வெற்றிகளைச் சாதிப்பதில் தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கும் எல்லைக் காவல்ப்படையைச் சேர்ந்த மக்களுக்கும் தமிழீழ மக்கள் கட்சி தனது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

ஆனையிறவு வீழ்த்தப்பட்டதானது, மிகத் தெளிவாகவே, சிங்களப் படைகளின் முதுகெலும்பை நொறுக்கிவிட்டது. தமிழீழத்தில் அவற்றின் இருப்புக்கான ஆதிக்க வேர் அகற்றப்பட்டு விட்டது. ஒரு ஆக்கிரமிப்புப் படை என்ற ஆதிக்க நிலையிலிருந்து தன்னை எப்படித் தற்காத்துக் கொள்வது என்ற பலவீனமான நிலைக்கு சிங்களப் படைகள் திடமாகத் தள்ளப்பட்டு விட்டன. இனி, தமிழீழத்திலிருந்து தாம் வெளியேற்றப்படுவது உறுதியாகி விட்டது என்பதை சிங்களப் படைகள் மட்டுமின்றி சிறிலங்கா அரசும் சிங்கள தேசமும் தெளிவாக உணர்ந்து விட்டது. நம் மீதான தங்கள் ஆக்கிரமிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கான இறுதி முயற்சியாக அந்நிய அரசுகளினதும் அந்நியப் படைகளினதும் உதவியை பகிரங்கமாகவே கோருகின்ற, அவமானகரமான, கோழைத்தனமான நிலைப்பாட்டை முழுச் சிங்களத் தேசமும் இப்போது எடுத்திருக்கின்றது. இது சிங்கள தேசத்தில் திரண்டுள்ள இனவெறியின் உச்ச வெளிப்பாட்டை மட்டுமல்ல, அவர்களுக்குள் உறைந்துள்ள ஆதிக்க வெறியையும் துல்லியமாக சுட்டிக் காட்டுகின்றது.

நம்மை அடக்குவதில் சிங்களத் தேசம் முழுவதிலும் ஒரேயணியில் திரண்டிருப்பதை புரிந்து கொள்வோமாயின், நமது முழுமையான சுதந்திரத்தை அடைவதில் நாம் அனைவரும் ஒரே தேசமாக திரள வேண்டியதன் அவசர அவசியத்தை உணர்ந்து கொள்ள முடியும். ஆனையிறவு வெற்றியினூடாக திறக்கப்பட்டுள்ள நமது சுதந்திரக் கதவு மீண்டும் அடைக்கப்படுவதை நாம் எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது. அந்நிய அரசுகளின் ஆதரவுடனோ அல்லது நேரடியான அந்நியத் தலையீட்டினூடாகவோ எம்மை மீண்டும் ஆக்கிரமிப்பதற்கு சிறிலங்கா அரசும் சிங்கள தேசமும் எடுக்கின்ற அத்தனை முயற்சிகளையும் நாம் துணிவுடன் எதிர்த்து முறியடிக்க வேண்டும். இதற்காக நாமனைவரும் ஒரே தேசமாகத் திரண்டு நமது விடுதலையை அதன் இறுதி வரை, முன்கொண்டு செல்வதுதான் நமக்கு முன்னுள்ள ஒரே தெரிவாகும். இந்தத் தெரிவிலிருந்து நாம் ஒரு அடி கூட பின்வாங்கக் கூடாது, பின்வாங்கவும் முடியாது. நமக்காகத் திறக்கப்பட்டு விட்ட சுதந்திர வாழ்வுக்குள் நாம் ஒரே மூச்சாக, ஒரே தேசமாக எம்பிக் குதிப்போம். நமக்கு முன்னே வருகின்ற அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து, நமக்கான வாழ்வுக்குள் நாம் நுழைவோம். நாம் இன்று அடைந்துள்ள இந்த மகத்தான தருணத்திற்காக, யுகதரிசனத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்த நமது மக்களினதும் போராளிகளினதும் வீரத்தையும் தீரத்தையும் நமது நெஞ்சில் நிறைத்தவாறு உறுதியாக முன்னேறுவோம்.

நமது விடுதலையை இறுதிவரை முன்கொண்டு செல்வதற்கான இந்த இறுதிப் போராட்டத்தில், நாம் வெகுஜன, ஆயுதப் போராட்ட தளங்களில் பல்வேறு அளவில் பல்வேறு முனைகளில் பன்முக வடிவங்களில் பங்கேற்போம். தமிழீழத்திலும் புலம்பெயர்ந்தும் வாழ்கின்ற தமிழ் மக்களிடையே சிறிலங்கா அரசுக்கும் அதன் படைகளுக்கும் அந்நியத் தலையீட்டுக்கும் எதிராக உறுதியான தொடர்ச்சியான வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்தல், விடுதலைப் புலிகள் அடைந்து வருகின்ற இராணுவ வெற்றிகள் நமது தேசத்தின் அரசியல் வெற்றிகளே என்பதை மிக உறுதியாக விளக்குதல், சர்வதேச சமூகங்கள் மத்தியில் நமது போராட்டம் தொடர்பாகவும் நமது சுதந்திரம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் தொடர் பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல் என நாம் ஒரே தேசமாக திரண்டு செயற்பட வேண்டிய கட்டத்தை அடைந்திருக்கின்றோம். இந்த அவசியத்தைப் புரிந்து கொள்வோம். நமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவோம்.

**ஒரே தேசமாய்த் திரள்வோம்! நம் சுதந்திரம் காப்போம்! நம் விடுதலை சமைப்போம்!**

வட அமெரிக்கத் தொடர்புகட்கு: 300 Borough Dr., PO Box 47032, Scarborough,On. M1P 4ZP Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு: 'The Editor' BM BOX 6769, LONDON, WCI 3XX, U.K., Tel: 07041372064



# ஆளுங்கூட்டு நெருக்கடியில்!

சிறிலங்கா அரசினது ஆட்சிக் கட்டமைப்பும், ஆளுங்கட்சியின் அகக் கட்டுமாணங்களும் இப்போது நிலை குலைந்து கிடக்கின்றது. அரசின் பொருளாதார, அரசியல், இராணுவ வகைப்பட்ட அனைத்து தளங்களும் சிதைந்த நிலையில் உள்ளது. கடந்த ஐம்பது வருடங்களாக மக்களை குறிப்பாக நமது தேசத்தை அடக்கி, அழித்தொழிப்புக்கு உள்ளாக்கி வந்த சிறிலங்கா அரசின் சிதைவிற்கான கட்டியமாக இந்த சீர்குலைவு அமைகின்றது.

கடுமையான செய்தி தணிக்கை, பிபிசி தடை மற்றும் நிருபர்கள் மீதான தாக்குதல், நோர்வே கொடி எரிப்பு, ஐ.நா குழுக்கள் வெளியேற்றம், செஞ்சிலுவை சங்கத்துடன் மருத்துவ பொருட்கள் தொடர்பான முறுகல் போன்ற நிகழ்வுகளால் சிறிலங்கா அரசின் சர்வதேச உறவு சீர் கெட்டுள்ளது.

இராணுவத்தினுள் அரசியல் தலையீடும், ஊழல்களும் பிரதானமாக, கடுமையான அடுத்தடுத்த படுதோல்விகளும் படைத்தரப்பினை மிகவும் பலவீனப்படுத்தியுள்ளது. அமைச்சர்களுக்குள் முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளது. தமிழர்களுக்கு எதிராக சிறிலங்காவில் ஆங்காங்கு நடைபெறும் வன்முறைகள் கொள்ளைகளை தடுத்து நிறுத்த முடியாத நிலை.

வடக்குகிழக்கில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தில் உள்ள தமது பிள்ளைகளை மீட்டுத்தருமாறு சிங்கள பெற்றோர்கள் வெளிப்படையாகவே கோரத்தொடங்கி விட்டனர். நிதி நிலைமை பங்குச்சந்தை யாவும் கடுமையாக சரிவுற்றுள்ளன. மூலதன உள்வரவு முடங்கியுள்ளது.

மொத்தத்தில், சந்திரிகா தலைமையிலான பொதுசனமுன்னணி அரசு தனது ஆளும் ஆற்றலை இழந்து நிற்கின்றது. இதன் காரணமாக, அந்நிய உதவி கொண்டு புலிகளை நசுக்கும்படி கோரும், இனவெறிக்கும்பலின் கடைசி வரிசையில் போய் தற்போது இந்த ஆட்சித்தலைமை நிற்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்